සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education - Western Province**

පළමු වාර ඇගයීම
முதலாம் தவணை மதிப்பீடு - 2018
**First Term Evaluation**

| ශ්‍රේණිය / தரம் / Grade | 11 | විෂයය / பாடம் / Subject | தமிழ்மொழியும் இலக்கியமும் | පත්‍රය / வினாத்தாள் / Paper | I | පැය / மணித்தியாலம் / Hours | 1 |
|---|---|---|---|---|---|---|---|

**<u>கவனிக்க வேண்டியவை</u>!**

I. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் 1இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.

II. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (I), (II), (III), (IV) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

III. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

IV. அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களை கவனமாக வாசித்து, பின்பற்றுக.

**தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. "நித்திலப் புன்னகை சுடர் வீசிட…."இங்கு **நித்திலம்** என்பது
   1. பவளம் 2. அழகு 3.முத்து 4. ஒளி
2. "குன்றனைய திருநெடுந்தோட் குகனென்பா…" இதில் **குன்று** என்பது
   1. மலை 2. குகை 3.பள்ளம் 4. மேடு
3. எட்துணையானும் இரவாது தான் ஈதல். **ஈதல்**என்பதன் எதிர்க்கருத்து.
   1. கொடுத்தல் 2. ஒறுத்தல் 3.கொடை 4. ஈகை
4. உயிரை விடவும் மானத்தைக் காத்தவன் அர்ச்சுனன்,**மானம்** என்பதன் எதிர்க்கருத்து
   1. மரியாதை 2. உண்மை 3.அவமானம் 4. சிறப்பு
5. "போதம் மூன்றும் நலம்செயும் நாடு" இங்கு **போதம் மூன்றும்** என்பதால் குறிப்பிடப்படுவன.
   1.வேர், மரம், பயன்
   2.பிறப்பு, வாழ்வு, இறப்பு
   3.நித்தியம், நைமித்தியம், காமியம்
   4.மேலுலகம், நடுவுலகம்,பாதாளவுலகம்

**பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6. பாடசாலையில் மாணவர்களின் சென்சஸ் கணக்கிடப்பட்டது. சென்சஸ் என்பதற்கு நிகரான தமிழ்ச்சொல்
   1. பாதீடு 2.விண்ணப்பம் 3.ஆய்வு 4. தொகைமதிப்பு
7. பின்வருவனவற்றுள் பாரசீக மொழிச்சொல்லாக அமைவது
   1. விகாரை 2. தார் 3.தயார் 4. பாக்கி
8. சிங்கம், கடல் என்னும் பொருளைத் தரும் சொல்
   1. மோதிரம் 2. ஆழி 3.சமுத்திரம் 4. கலி

9. கடைவாய் என்பது

1. இலக்கணமுடையது 2. இலக்கணப்போலி

3.மொழிமுதற்போலி 4. தகுதி வழக்கு

10. ஒத்த கருத்துள்ள சொற்களின் இணைப்பு

1. காலம் – அகாலம் 2. வாதி – பிரதிவாதி

3.அந்தம் – ஆதி 4. அந்தம் –இறுதி

11. யானை பிளிறும் என்பது போல தேவாங்கு

1. கத்தும் 2. அலறும் 3.அழும் 4. உறுமும்

12. தேர்தல் பிரசாரங்களின் போது பல்வேறு குற்றம் குறைகள் முன்வைக்கப்படுகின்றன. குற்றங்குறை என்பது

1. மரபுத்தொடர் 2. இணைமொழி

3.இரட்டைமொழி 4. அடுக்குத் தொடர்

13. மன்னர்களால் செய்யப்படும் சிறப்பு

1. மாராயம் 2. நிந்தகம் 3.ஏகபோகம் 4. மான்யம்

14. காவியா கைத்தொலைபேசி வாங்கித்தரும்படி ஒற்றைக்காலில் நின்றாள். ஒற்றைக்காலில் நிற்றல் என்னும் மரபுத்தொடரின் பொருள்

1. இரந்து கேட்டல் 2. ஒருகாலில் நிற்றல்

3.வலிந்து கேட்டல் 4. பிடிவாதமாக நிற்றல்

15. மனத்துணிவோடு செய்யும் செயல்கள் சிறப்படையும் என்னும் கருத்தைத் தரும் பழமொழி

1. இக்கரைக்கு அக்கரைப்பச்சை 2. கனிந்த பழம் தானே விழும்

3.அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான் 4. தன்வினை தன்னைச்சுடும்

16. நிலையற்ற தன்மையினைக் குறிப்பதற்குப் பொருத்தமான உவமைத் தொடர்

1. ஓடும்புளியம்பழமும் போல 2. நீர்க்குமிழிபோல

3.கல்மேல் எழுத்துப் போல 4. தாமரை இலைத்தண்ணீர் போல

17. விடாமுயற்சி வெற்றி தரும் என்ற கருத்தை உணர்த்தும் முதுமொழி

1. எறும்பூரக் கற்குழியும்

2. ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்

3.இட்டுக்கெட்டார் எங்கும் இல்லை

4. ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்க வேண்டும்

18. "வழிமேல் விழிவைத்து" என்ற அருஞ்சொற்றொடரால் உணர்த்தப்படுவது

1. நன்றியுணர்வு 2. இரண்டறக்கலத்தல்

3.கொடுத்து மகிழ்தல் 4.எதிர்பார்த்துக் காத்திருத்தல்

19. கட்டுக்கடங்கா இளைஞன்

1. ஊதாரி 2. வீரன் 3.சிறுபட்டி 4. மேதை

20. அந்தி வானம் செக்கச்சிவந்திருந்தது. 'செக்கச்சிவந்து' என்பது

1. இணைமொழி 2. அடுக்கிடுக்குத்தொடர்

3.இரட்டைக்கிளவி 4. பழமொழி

**பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. பந்தை அடித்தான். என்னும் தொடரின் எழுவாய்

1. அவன் 2. பந்து 3.அடித்தான் 4. நீ

22. உயிர்மெய் நெடில் எழுத்துக்களின் எண்ணிக்கை

1. 90 2. 216 3.18 4. 126

23. மூன்று மெய்கள் மயங்கி வந்த சொல்
1. பார்வை 2. வாய்க்கால் 3.அம்மன் 4. பங்கு
24. ககரம் எந்தச் சொல்லில் "K" என்னும் ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கின்றது.
1. தேகம் 2. சுகம் 3.மங்கை 4. கப்பல்
25. குறிப்பு வினைப்பகுபதமாக இடம்பெற்ற சொல்
1. கரியன் 2. உண்டான் 3.பொன்னன் 4. சோலை
26. வெள்ளாடை என்பது எவ்வகைத் தொகை
1. உவமைத்தொகை 2. வினைத்தொகை
3.பண்புத்தொகை 4. உம்மைத்தொகை
27. மலையில் வீழருவி இதில் இடம்பெற்ற பொருள்
1. ஏது 2. எல்லை 3.ஒப்பு 4. நீங்கல்
28. பின்வருவனவற்றுள் சரியாக எழுதப்பட்ட சொற்கூட்டம்.
1. கலாசாரம்,கைம்மாறு, நாகரீகம், பாகல்காய்
2. கலாசாரம்,கைம்மாறு, நாகரிகம், பாகற்காய்
3.கலாச்சாரம், கைமாறு, நாகரீகம், பாகற்காய்
4. கலாச்சாரம், கைமாறு, நாகரிகம், பாகற்காய்

**பொருத்தமான உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியை தெரிவு செய்க.**

29. 1. இயல்புப் புணர்ச்சி : அண்ணாமலை, பொன்மலர், கடலலை
2. தோன்றல் விகாரப்புணர்ச்சி : பாற்சோறு, தயிர்க்கடல், பெண்ணடிமை
3.திரிதல் விகாரப்புணர்ச்சி : முட்செடி, பலாப்பழம், நீலவானம்
4. கெடுதல் விகாரப்புணர்ச்சி : சட்டநூல், மட்குடம், வட்டநிலா
30. 1.மாற்றுப் பெயர் : வந்தவன், நீ
2. ஆக்கப் பெயர் : முதலாளி, படிப்பு
3.கூட்டுப் பெயர் : நீர்வீழ்ச்சி, போகாமை
4. தொழிற் பெயர் : நடத்தல், செய்யாதவனை

**புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. போதைப்பொருட் பாவனையின் விளைவுகள் பற்றி மாணவர்களுக்கு …………………….. வழங்கப்பட்டது.
1. பாதுகாப்பு2 . தண்டனை 3.விழிப்புணர்வு 4. கண்காணிப்பு
32. சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையே அபிவிருத்திக்கான …………………………… கைச்சாத்திடப்பட்டது.
1. உத்தரவாதம் 2. பிரகடனம் 3.ஒத்துழைப்பு 4. ஒப்பந்தம்
33. அரச ஊழியர்களினால் முன்வைக்கப்பட்ட ……………………………. அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டன.
1. கோரிக்கைகள் 2. பிரகடனம் 3.விடயம் 4. பிரசாரம்
34. பாடசாலையில் நடைபெற்ற தமிழ் விழாவிற்கு பிரதம ……………………………. ஆக வலயக்கல்விப் பணிப்பாளர் கலந்து கொண்டார்.
1. அதிரி 2. அதிதி 3.அதீதி 4. அதிபதி

**வாக்கியங்களின் முற்பகுதிக்கு பொருத்தமான முடிக்கும் பகுதியை தெரிவு செய்க.**

35. மழை வருமென அறிந்திருந்தால்
1. குடை கொண்டு வந்திருப்பேன் 2. குடை கொண்டு வந்தேன்
3.குடை கொண்டு வருகிறேன் 4. குடை கொண்டு வருவேன்

36. அந்தச் செடியிலுள்ள ஒவ்வொரு பூவும்

1. அழகானவை 2. அழகான 3.அழகானது 4. அழகு

**தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

தாய்மை இங்குரைக்கும் போதம்
தரணியில் சிறந்த வேதம்
தேய்வுறா அவளின் பாதம்
தேசுடை சுவன இல்லம்
சேய் மனம் மலர்ந்து தூங்கி
சுகம் பெற தினமும் இங்கே
வாய் சொல்லும் தாலாட்டுக்கள்
வாழ்க்கையின் ஜீவ கீதம்

37. இப்பாடலின் மையக் கருத்தாக அமைவது
1. சேய் தூங்க தாய் தாலாட்ட வேண்டும்
2. தாலாட்டுப் பாடல்களே ஜீவ கீதங்கள்
3.தாயின் பாதம் தேய்வுறாது
4. தாய்மையை விட சிறந்த பேறு தரணியிலில்லை

38. இப்பாடலில் வெளிப்படும் முதுமொழி
1. தாயிற் சிறந்த கோவிலில்லை
2. தாயின் காலடியில் சுவர்க்கம் உண்டு
3.அன்னையைப் போல் ஒரு தெய்வம் இல்லை
4. தாயைப் போல் பிள்ளை

39. இப்பாடலில் தால், சேய் என்பதன் பொருள் முறையே
1. நாக்கு, குழந்தை 2. குழந்தை, நாக்கு
3.பனை,குழந்தை 4. நாக்கு, தாய்

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றி காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்புமுறையை தெரிவு செய்க.
அ. அது உலகம் முழுவதற்கும் பொதுவான நீதியை எடுத்துரைக்கின்றது.
ஆ. அவற்றுள் திருக்குறள் ஈடு இணையற்றது.
இ. அங்கே சங்ககாலத்திலிருந்தே பல நூல்கள் தோன்றின.
ஈ. தமிழ்நாடு பரத கண்டத்தின் தென் பகுதியில் அமைந்துள்ளது.
உ. அதனால் உலகப் பொதுமறை எனப் போற்றப்படுகின்றது.

1. இ,ஈ, உ, அ, ஆ 2. ஈ, இ, ஆ, அ, உ
3.ஆ, அ, உ, இ,ஈ 4. உ,ஈ, இ, அ, ஆ

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

පළමු වාර ඇගයීම
முதலாம் தவணை மதிப்பீடு - 2018
First Term Evaluation

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 11 | විෂයය / பாடம் / Subject: தமிழ் மொழியும் இலக்கியமும் | පත්‍රය / வினாத்தாள் / Paper: II | පැය / மணித்தியாலம் / Hours: 02 |

01 **சுருக்கமான விடை எழுதுக**

I. பின்வரும் தொடரை சந்தி பிரித்து எழுதுக.
"புலன ழிந்தொரு புத்துயி ரெய்துவேன்"

II. "மகேன் ஒனக்கு நன்ம கெடக்கும்" என்ற பேச்சு வழக்கு வாக்கியத்தை எழுத்து வழக்குக்கு மாற்றி எழுதுக.

III. "கோயிலில் அடியார்கள் தேரை இழுத்தார்கள்" இவ்வாக்கியத்தை செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

IV. அழைப்பிதழில் இடம்பெறாத அம்சங்கள் இரண்டை எழுதுக.
தலைப்பு, தொடருரை, விளிப்பு, அழைப்பவர், உள்முகவரி

V. "வறுமையிலும் செம்மை வேண்டும்" என்பதற்குப் பொருத்தமான பழமொழி ஒன்றை எழுதுக.

VI. இப்போதெல்லாம் திசைகள் எனக்கு துலக்கமாயில்லை. இவ்வாக்கியத்திலுள்ள எழுவாய் பயனிலைகளை எடுத்துக்காட்டுக.

VII. "நாங்கள் படித்த காலத்தில் விளையாடிக் கொண்டேயிருப்போம்" இவ்வாக்கியத்தில் இடம்பெற்ற வழு எவ்வகையைச் சார்ந்தது?

VIII. பின்வரும் வாக்கியத்திற்கு மிகப் பொருத்தமான நிறுத்தக் குறியினையிட்டு அதனை மீண்டும் எழுதுக.
"பெண்டிர் தமையுடையிர் பெண்பாவமன்றோ பெரியவசை கொள்வீரோ"

IX. "வானக் கடலிடை வெண்ணிலாவே" இதில் இடம்பெற்றுள்ள அணி யாது?

X. அடுத்த மாதம் பரீட்சை நடைபெறும் என அதிபர் கூறினார்" இவ்வாக்கியத்தின் தலைமைத்தொடர், சார்புத் தொடரை எழுதுக.

02 பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு எழுதுக. பொருத்தமான தலையங்கம் இடுக.

I. இன்றைய மாணவரிடையே வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றது. அதற்குப் பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. அதனால் மாணவர்களின் மொழியாற்றல் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. அதற்கான காரணங்களை விளக்கித் தீர்வினை முன்வைக்கும் வகையில் **விளக்கக் கட்டுரை.**

II. இன்று நமது நாட்டில் வீதி விபத்து என்பது சர்வ சாதாரணமாகி விட்டது. அன்றாடச் செய்திகளில் இவை முக்கிய இடம் வகிக்கின்றன. வீதி அபிவிருத்தியின் போதாமையும், வாகனச் சாரதிகளும், பாதசாரிகளும் வீதி ஒழுங்குகளையும் விதிகளையும் கடைப்பிடிக்காமையும் காரணமாகும். வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தி நிகழ்த்தப்படும் ஒரு **மேடைப் பேச்சு**.

III. மேலைநாட்டு நாகரிக மோகத்தில் எமது நாட்டு இளைஞர் யுவதிகள் மூழ்கியுள்ளனர். இதனால் நாட்டில் கலாசார சீரழிவு ஏற்படும் வாய்ப்பு உள்ளது. எனவே மேல்நாட்டு நாகரிகத்தைப் பின்பற்றுவதால் ஏற்படும் நன்மை, தீமை பற்றி இருவரிடையே இடம்பெறும் **உரையாடல்**.

IV. சிறுவயதிலேயே தாய்,தந்தையை இழந்த பிரதீபன் தனது தங்கையுடன் தனிமைப்பட்டு குடும்பச்சுமையை தாங்குகின்றான். இதனால் உறவுகளால் ஒதுக்கிவிடப்பட்ட போதும் சிறந்த நட்பினாலும் ஆசிரிய வழிகாட்டலாலும் கல்வியில் உயர்ந்து உயர் நிலையடைகிறான். என்பதைக் கருவாகக் கொண்டு ஓர் **சிறுகதை** எழுதுக. அதற்குப் பொருத்தமான தலைப்பிடுக.(25 புள்ளிகள்)

03. **பின்வரும் உரைப்பகுதியின் கருத்தை 40 – 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)**

பரந்து விரிந்த உலகம் சுருங்கி இன்று ஒரு குவலயக் கிராமம் ஆகக் காட்சியளிக்கின்றது. ‘‘கற்றது கையளவு கல்லாதது உலகளவு’’ என்கிறோம். ஆனால் அறிவியல் தொழிநுட்ப வளர்ச்சியினால் இன்று உலகம் கையளவு தகட்டுக்குள் அடக்கப்பட்டுள்ளது. தகவல் தொழிநுட்பம் மற்றும் கணிணி பொறித் தொழிநுட்பம் இவற்றின் சங்கமத்தால் உருவாகிய இணையம் இன்று தகவல் பரிமாற்றத்தில் ஒரு பெரும் புரட்சியையே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. கணினி மூலம் நமக்கு வேண்டிய தகவல்களை நாமே உலகம் முழுவதும் சென்று தேடி எடுத்துக் கொள்ள முடிகின்றது. துலக்கத்துலக்க கேட்டதெல்லாம் கொண்டு வந்து தரும் அலாவுதீனின் அற்புத விளக்காக இன்றைய உலகில் இணையம் செயற்படுகின்றது. இணையத்தை சுற்றி வரும் முறையே வலை எனப்படுகிறது. வலை நோக்கர் (Browser) என்ற சிறப்பு இணையத்தொடர் மூலம் வலையில் உள்ள கடலளவு தகவல்களைப் பெறமுடிகிறது. இணையம் முப்பது ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டது. என்றாலும் அண்மையில் தான் அதன் பயன்பாடு பெருகி மனித வாழ்வில் ஒருபெரும் புரட்சியையே உருவாக்கியுள்ளது. தொடக்கத்தில் இணையம் அஞ்சல் செய்திகள் அனுப்புவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. நாளடைவில் இணையத்தின் பயன்பாடு சிறுகச் சிறுகப் பெருகி இன்று மின் அஞ்சல், மின் வணிகம், மின்னிசை, மின் அரட்டை, மின்நூலகம் போன்ற வகைகளில் பயன்பட்டு வருகின்றது. இணையப் பயனாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகின்றது. இனிவருங் காலத்தில் இது மேலும் அதிகரித்துச் செல்லும். இந்நிலையில் இணையத்தைப் பெரும்பாலும் பயன்படுத்துகின்றவர்கள் யார்? எத்தகைய தகவல்களுக்காகஇணையத்தை நாடுகின்றனர்? இணையத்தின் வாயிலாகப் பெறப்படும் பயன்கள் யாவை? என்பன குறித்து ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

(6+2+2 =புள்ளிகள்)

04. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

இராமகிருஷ்ணமடத் துறவியான சுவாமி விபுலானந்தர் 1892 – 1947 வரை காலப்பகுதியில் வாழ்ந்தவர். மட்டகளப்பைச் சேர்ந்த இவர் முத்தமிழையும் முறையாகக் கற்று புலமை பெற்றவர். ஆகையால் அவர் ஆற்றிய தொண்டு தமிழ் முத்துறைகளையும் வளர்த்திடுவதாய் அமைந்துள்ளது. அவரது துறவற வாழ்க்கையும், பலமொழி அறிவும், கணித விஞ்ஞான புலமையும், சீரிய தமிழ்த் தொண்டுக்குப் பெரிதும் துணைநின்றன. தமிழின் தொன்மை பற்றியும் தமிழ் இலக்கிய வளம் பற்றியும் நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும், மதங்கசூளாமணி எனும் நாடக நூலையும், பழம்பெரும் இசைக்கருவியான யாழ் பற்றிய யாழ் நூலையும் வெளியிட்டவர்.

I. சுவாமி விபுலானந்தர் எம்மடத்தைச் சேர்ந்தவர்?

II. இவரின் நிறைவான புலமைக்குக் காரணம் யாது?

III. இவரின் சீரிய தமிழ்த் தொண்டுக்குத் துணை நின்றவை எவை?

IV. இவரின் கட்டுரைகள் எவை பற்றி அமைந்தன?

V. விபுலானந்தரின் நாடக, இசை நூல்கள் எவை?

(2x5 = 10 புள்ளிகள்)

05. இன்று இளைஞர் மத்தியில் அதிகரித்து வரும் போதைப் பொருட்களின் பாவனையினால் எமது நாடு பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றது. எனவே போதைப் பொருளின் பாதக நிலைமையை நெறிப்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு பத்திரிகை நிறுவனம் ஒன்றிற்கு 100 சொற்களுக்கு குறையாது கடிதம் எழுதுக.

அல்லது

சூழல் மாசடைவதற்குப் பொலித்தீன் பயன்பாடு முக்கிய காரணமாகும்.பொலித்தீன் பாவனையை மக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றி 100 சொற்களில் அமையுமாறு ஒரு துண்டுப்பிரசுரம் எழுதுக. (15 புள்ளிகள்)

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education - Western Province**

පළමු වාර ඇගයීම
**முதலாம் தவணைமதிப்பீடு - 2018**
**First Term Test Evaluation**

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 11 | විෂයය / பாடம் / Subject: தமிழ் மொழியும் இலக்கியமும் | පත්‍රය / வினாத்தாள் / Paper: III | පැය / மணித்தியாலம் / Hours: 02 |

**கவனிக்க:**
**அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
**1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.**

1. சுருக்கமாக விடை தருக.

I. "மாக மடங்கலும் மால்விடையும் பொன்
னாகமும் நாகமும் நாண நடந்தார்"
அ. நாவலர் எழுந்தார் என்னும் கட்டுரையில் நாண நடந்தார் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
ஆ. 'மடங்கல்' என்பதன் பொருள் யாது?

II. "சினந்தரிவி வெட்டும் இளந்தாரி மாரை
கண்ணூறு படாமற் காரும் ஐயனாரே!"
அ. இங்கு குறிப்பிடப்படும் கிராமிய நம்பிக்கை யாது?
ஆ. இங்கு குறிப்பிடப்படும் காவல் தெய்வம் யாது?

III. "தன் மெய்யை நிற்பது ஆக்கி இறந்தான் தன் இளந்தேவி"
அ. இங்கு சத்தியத்திற்காக உயிர் நீத்தவர் யார்?
ஆ. இங்கு "இளந்தேவி" எனக்குறிப்பிடப்படுபவர் யார்?

IV. "தச்சன் செய்த சிறுமா வையம்……….
அ. இப்பாடல் எந்நிலத்திற்குரியது?
ஆ. பாடலாசிரியரைக் குறிப்பிடுக.

V. "486 கம்பியூட்டர் என்று உச்சாடனம் செய்தவாறே அதன் வீரப்பிரதாபங்களைப் பற்றி ஒரு பரணி பாடினார்"
அ. உச்சாடனம் என்பதன் பொருள் யாது?
ஆ. பரணி என்பது எவ்வகை இலக்கியமாகும்?

VI. "….நரகம் புகினும் எள்ளேன்….."
அ. இக்கூற்றைக் கூறியவர் யார்?
ஆ. எள்ளேன் என்பதன் பொருள் யாது?

VII. "விலங்கி யற்கை யிலையெனில் யாமெல்லாம்
விரும்பு மட்டினில் விண்ணுற லாகுமே"
அ. விலங்கியற்கை என்பது எதனைக் குறிக்கின்றது?
ஆ. விரும்பு மட்டினில் விண்ணுறவாகுமே என்ற தொடர் மூலம் பாரதியார் கூற முற்படுவது யாது?

VIII. "நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம்
நெருங்கக் காண்பது கன்னலிற் செந்நெல்"
அ. இங்கு கன்னல் என்பதன் பொருள் யாது?
ஆ. குற்றால நாட்டில் வந்து சேர்பவர்களிடம் இருந்து நீங்கப் பெறுவது யாது?

IX. “ஆர்தட் டினும் தட்டு வராமலே அன்னதானத்துக்கு மார் தட்டிய துரைமால்….”
அ. இங்கு குறிப்பிடப்படும் வள்ளல் யார்?
ஆ. இப்பாடலின் ஆசிரியர் யார்?

X. “பதியிழந்தனம் பாலனையிழந்தனம்”
அ. பதி எதனைக் குறிக்கின்றது?
ஆ. பாலன் என்பது யாரைக் குறிக்கின்றது?

**2. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

I. அடக்க முடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா – மடைத் தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடியிருக்குமாம் கொக்கு
அ. அடக்கமுடையாரின் இயல்பு யாது?
ஆ. இப்பாடலில் இடம்பெறும் அணியை விளக்குக.

II. பங்கப் பழனத் துழுமுழவர்
பலவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட்டெறியக் குரங்கிளநீர்
தனைக்கொண்டெறியும் தமிழ்நாடா!
கொங்கர்க் கமரா பதியளித்த
கோவே! ராசகுலதிலகா!
வெங்கட் பிறைக்கும் கரும்பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே.
அ. சோழ நாட்டின் வளத்தை விளக்குக.
ஆ. சோழ மன்னனின் வீரச் சிறப்பை விளக்குக.

III. சுடு மயாணத்திடை தன் துணை ஏக
தோன்றல் துயர்க் கடலின் ஏக
கடுமை ஆர் கானகத்துக் கருணை ஆர்
கலிஏகக், கழல்கால் மாயன்
நெடுமையால் அன்று அளந்த உலகு எல்லாம்
தன் மனத்தே நினைந்து செய்யும்
கொடுமையால்,அளந்தாளை, ஆர் இவர்
என்று உரை என்ன, குரிசில் கூறும்
அ. கைகேயின் இரக்கமில்லாத கொடுமைத் தன்மை வெளிப்படுமாற்றை விளக்குக.
ஆ. கழல்கால் மாயன் சிறப்பு யாது?

IV. சினிமா,திரைப்படமாக்கப்பட்ட நாடகம் அல்ல. அது ஒரு அடிப்படையான வித்தியாசம், நிகழ்ச்சி ஒன்றை அவையோரின் முன் நிகழ்த்திக் காண்பிப்பது நாடகம். சினிமாவின் தன்மையே வேறு, தமிழ் நாட்டில் சினிமா வளராததற்கு ஓர் முக்கிய காரணம் அது நாடகத்திற்கு அடிமைப்பட்டுக் கிடப்பது தான். இதற்கு வரலாற்று ரீதியான காரணங்களும் உண்டு.
அ. நாடகம் என்றால் என்ன?
ஆ. தமிழ் நாட்டில் சினிமா வளராமைக்கான காரணம் யாது?

V. இருதுபர்ணன் என்ற அரசன், தமயந்தியின் இரண்டாம் சுயம்வரத்திற் கலந்து கொள்ளத் தேரில் விரைகின்றான். தேரை நளன் ஓட்டியதால் அது மின்னல் வேகத்தில் போய்க் கொண்டிருக்கின்றது. தேர் சமதரையைக் கடக்கும் போது அங்கே தான்றிக் காய்கள் கூடை கூடையாகக் காய்த்திருப்பதைக் கண்டார்கள். அப்போது இருதுபர்ணன் தலையைத் திருப்பிப் பார்த்து விட்டு “பத்தாயிரம் கோடி காய்கள்” என்று சரி கணக்காகச் சொன்னானாம். அவன் ஓர்பார்வையில் எண்ணும் அட்சய இருதயம் எனும் கலையைப் படித்து இருந்தான்.
அ. இப்பகுதியில் தேரை ஓட்டிச் சென்றவன் யார்? அவனது சிறப்பு யாது?
ஆ. அட்சய இருதயக் கலை என்றால் என்ன? அதில் சிறந்தவன் யார்?

(4x5= 20 புள்ளிகள்)

3. நாட்டார் பாடலில்
   அ. மீனவர் பாடல் பாடப்படும் சந்தர்ப்பத்தையும் அவை வெளிப்படுத்தி நிற்கும் விடயங்களையும் எழுதுக.
   ஆ. காதற் பாடலில் தலைவன் தலைவியை அடைவதற்கான உறுதி மொழியை எவ்வாறு கூறுகின்றான்?

அல்லது

   திருக்குறள் பேதமை அதிகாரத்தில்
   அ. பேதமையாளரின் இயல்புகளை விளக்குக.
   ஆ. பேதமை கொண்டோரின் செயல்களின் விளைவுகள் எவை?

4. நாவலர் எழுந்தார்
   அ. பிறிற்றோவின் நேர்மையற்ற செயல்கள் குறித்து கட்டுரையாசிரியர் முன்வைத்துள்ள கருத்துக்கள் எவை?
   ஆ. நாவலரின் திறமை நேர்மை காட்டப்படும் விதத்தினை விளக்குக.

அல்லது

   கம்பியூட்டர் சிறுகதையில்
   அ. கம்பியூட்டரின் வரவால் வீட்டில் ஏற்பட்ட மாறுதல்களை விளக்குக.
   ஆ. கதையில் இடம்பெறும் நகைச்சுவையினை தொகுத்து எழுதுக.

## 5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக.

5. தண்டாமரையுடன் பிறந்தும்….. என்ற பாடலின் மூலம்
   அ. கற்றோரின் இயல்புகளும்
   ஆ. கல்லாதோரின் இயல்புகளையும் சுட்டிக்காட்டி விளக்குக

6. கம்பராமாயணம் குகப்படலத்தில்
   அ. பரதனின் குணப்பண்புகள்.
   ஆ. இப்பாடப்பகுதியில் இடம்பெறும் மூன்று உவமை அணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

7. இலட்சியமும் சமநோக்கும் என்ற கட்டுரையில்
   அ. இக்கட்டுரையில் கூறப்படும் இலட்சியங்களைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை?
   ஆ. கடைப்பிடிக்காவிட்டால் ஏற்படும் தீமைகள் யாவை?